# Deposition of Witness
## (Chapter XXIII Code of Criminal Procedure )
## In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.13 / P.W.12 |
| Name | : காளியப்பன் - மோட்டார் வாகன ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : பொன்னுசாமி |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 31.01.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

**01.** நான் தற்போது திருப்பத்தூரில் வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து விடுப்பில் உள்ளேன். நான் கடலூரில் கடந்த 16.08.2013 அன்று மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருப்பாப்புலியூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தை பெற்று விபத்து வாகனமான TN-32N-3540 என்ற பதிவெண் கொணட் கனரக அரசு பேருந்தை மாலை 04.20 மணியளவில் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது வாகனத்தின் முன்பக்க பம்பர் ஒடுங்கி இருந்தது. வாகனத்தின் கால்தடை திறன் 66% இருந்தது. கைத்தடை திறன் இயல்பு நிலையில் இருந்தது. தடைகள் சம அளவில் இருந்தது. சுக்கான் மற்றும் டயர்கள் நல்ல நிலையில் இருந்தது. இந்த விபத்து மேற்சொன்ன வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **( மோட்டர் வாகன ஆய்வறிக்கை அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது)** இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**02.** இதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு விபத்து வாகனமான PY-01PW-5982 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை 27.08.2013 மாலை 04.30 மணியளவில் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது வாகனத்தின் முகப்பு விளக்கு மற்றும் இரண்டு திசைக்காட்டி விளக்குகள், முன்பக்க மட்கார்டு, மீட்டர் பாக்ஸ், முன்வலது கால்தாங்கி ஆகியவை உடைந்திருந்தது. வாகனம் இயக்க இயலாத நிலையில் இருந்ததால் இருந்த நிலையிலேயே ஆய்வு செய்ததில் தடைகள் நல்ல நிலையில் இருந்தது. handle Bar மற்றும் டயர்கள் நல்ல நிலையில் இருந்தது. இந்த விபத்து மேற்சொன்ன வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன்.

**( மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சாஆ.6 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**03.** இருசக்கர வாகனம் விபத்து நடந்து 13 நாட்கள் கழித்து தான் ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 13 நாட்கள் இடைவெளியில் ஏதேனும் இயந்திர கோளாறு இருந்திருந்தால் சரிசெய்திருக்கக்கூடும் என்றால் அதுப்பற்றி நான் அறுதியிட்டு கூற இயலாது. இயந்திர கோளாறு போலிசாரால் சரிசெய்யப்பட்டு பின்னர் ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல தவறு. ஒரு வண்டியில் பிரேக் failure ஆனால் எத்தனை நாளில் சரிசெய்ய முடியும் என்றால் குறைந்தது 2 மணி நேரம் முதல் 5 மணி நேரத்திற்குள் சரி செய்யலாம்.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.